# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10, 11

## இலக்கியத்தொகுப்பு

**அலகு 03**
**பாரதியார் சுயசரிதை**



## வினா விடைத்தொகுப்பு

**கடந்த கால க.பொ.த (சா/த) வினாக்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது**

தொகுப்பாசிரியர்: செ.ராஜ்குமார்

**"வாழ்வதற்காக தினமும் வாசி முன்னேறுவதற்காக நாளும் யோசி"**

No - 15A, Anumar Street, Nochchimunai, Batticaloa T.P 0772926914



S. Rajkumar

**அலகு 03**
**பிள்ளைக் காதல்**

## பாரதியார் சுயசரிதை

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**நீரெடுத்து வருவதற்கு அவள் மணி**
**நித்திலப் புன்னகை சுடர் வீசிடப்**
**போர் எடுத்து வரும் மதன் முன் செல**
**போகும் வேளை அதற்குத் தினம் தோறும்**
**வேர் எடுத்துச் சுதந்திர நற்பயிர்**
**வீழ்த்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்**
**சீர் எடுத்த புலை உயிர்ச் சாரர்கள்**
**தேச பக்தர் வரவினைக் காத்தல் போல்.**

### அரும்பத விளக்கம்

1. நித்திலம் - முத்து
2. மதன் - மன்மதன்
3. சீர் - புகழ்
4. புலையுயிர் - உயிர்க்கொலை
5. சாரர்கள் - பகைவர்கள், படைவீரர்கள்

### பொருள்

நீர் எடுத்து வருவதற்காக செல்லும் அவளது அழகிய முத்துப் போன்ற புன்னகை பிரகாசிக்க, மன்மத காதல் போர் தொடுத்து அவளைக் கண்டவர் காதல் கொண்டு மயங்கும் படியாக முன் சென்றான் இவ்வாறு ஒவ்வொரு நாளும் அவள் செல்லும் வழியில், சுதந்திரம் எனும் நற்பயிரை வேரோடு அழிக் முற்படும் உயிரைக் கொல்லும் படைவீரர்கள் தேச பக்தர்களை அழிப்பதற்கு வருகைக்கா காத்திருப்பதைப்போல நானும் அவளின் வருகைக்காக காத்திருந்தேன்.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**காத்திருந்து அவள் போம் வழி முற்றிலும்**
**கண்கள் பின்னழகு ஆர்த்து களித்திட**
**யாத்த தேர் உருளைப்படு மேழைதான்**
**யாண்டு தேர்செலும் ஆங்கு இழுப்புற்று என**
**கோத்த சிந்தையோடு ஏகி அதில் மகிழ்ந்து**
**கொண்டு நாள்கள் பல களித்திட்டனன்**
**பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல்**
**புலன் அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்**

### அரும்பத விளக்கம்

1. பின்னழகு ஆர்த்து - பின்னழகை ஆராய்ந்து
2. மேழை - சிறிய விலங்கு
3. யாத்த - உருவாக்கிய
4. ஜோதி - பிரகாசம், ஒளி
5. வதனம் - முகம்

### பொருள்

அவள் செல்லும் போது காத்திருந்து, அவள் செல்லும் வழியெல்லாம் எனது கண்கள் அவளது பி அழகினை ஆராய்ந்து மகிழ்ச்சி கொள்கிறது. உருவாக்கப்பட்ட உருளுகின்ற தேர்ச் சக்கரத்தில் அகப்பட் சிறிய விலங்கு அச் சக்கரத்தோடு சேர்ந்து இழுபட்டுச் செல்வது போல
பாரதியார் மனம் இழுபட்டுச் செல்வதால் அவளது சிந்தைனையோடு சுழன்று அதில் மகிழ்ச்சி கொண் பல நாட்களைக் கழித்தேன். அவளது பிரகாசமான முகமானது திரும்பி என்னைப் பார்த்தால் புலன்க அழிந்து புதுப்பிறவியை நான் அடைவேன்



S. Rajkumar

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**புலங்களோடு கரணமும் ஆவியும்**
**போந்து நின்ற விருப்புடன் மானிடன்**
**நலங்கள் ஏது விரும்புவன் அங்கு அவை**
**நண்ணுறப் பெறல் திண்ணம் தான் என**
**இலங்கு நூல் உணர் ஞானியர் கூறுவர்**
**யானும் மற்று அது மெய் எனத் தேர்ந்துளேன்**
**விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்**
**விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே.**

### அரும்பத விளக்கம்

ஆவி - உயிர்
போந்து - சேர்ந்து
நலன்கள் - நன்மைகள்
திண்ணம் - உறுதி
இலங்கு - விளங்கும்
விலங்கியற்கை - விலங்கின் குணம்
விண்ணுறல் - சொர்கம், வானுலகம் அடைதல்

**பொருள்**

ஐம்புலன்களோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உயிரும் ஒன்றுபட்டு விருப்பத்துடன் மனிதன் நலன்களை விரும்புவான் எனில் அவன் விரும்பும் நலன்களை சிறிதளவும் குறைவில்லாமல் அடைவது உறுதியாகும். என்று நூல்களை கற்று உணர்ந்த முனிவர்கள்/ அறிஞர்கள் கூறியுள்ளனர். நானும் இதனை உண்மையென அறிந்துள்ளேன். அங்கும் இங்கும் அலைகின்ற விலங்கின் குணங்கள் இல்லை எனில் நாம் அனைவரும் விரும்பும் போது சொர்க்கத்தினை அடையலாம்.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**சூழும் மாய உலகினில் காணுறும்**
**தோற்றம் யாவையும் மானதம் ஆகுமால்**
**ஆழும் நெஞ்சகத்து ஆசை இன்று உள்ளதேல்**
**அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்**
**தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்**
**தாவித் தாவி பலபொருள் நாடுவோர்**
**வீழும் ஓர் இடையூற்றினுக்கு அஞ்சுவோர்**
**விரும்பும் யாவும் பொறார் இவர் தாமன்றே.**

### அரும்பதம்

1. மாயஉலகம் - போலி உலகம், பொய் உலகம்
2. மானதம் - மனம் விரும்பும்
3. தாழுமுள்ளத்தார் - தாழ்ந்த இழிவான உள்ளமுடையோர்

### பொருள்

பரந்த இந்த பொய்யான உலகத்தில் காணும் காட்சிகள் யாவும் நிலையற்றதாகும். இதை மன விரும்புமானால், இன்று அடி மனதில் தோன்றும் விருப்பம் இருக்குமானால் அதன் பயன் நாளை விளைந்திடும். தாழ்ந்த உள்ளமுடையவர், சோர்வான மனம் உடையவர், ஆடு போல் தாவி பல பொரு நாடுவோர், தமக்கு எதிர்காலத்தில் இடையூறு ஏற்படும் என அஞ்சுவோர், தாம் விரும்பும் எதனையு பெறமாட்டார்கள்.

### சந்தி பிரிக்கப்பட்ட பாடல்

**விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்**
**வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்**
**சதிகள் செய்வர் பொய்ச் சாத்திரம் பேசுவர்**
**சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்**
**மதியினில் புலை நாத்திகம் கூறுவர்**
**மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே**
**கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார்**
**கண்ணில்லாதவர் போல திகைப்பர் காண்.**



S.Rajkumar

### அரும்பதங்கள்

1. வெகுளி - கோபம்
2. நிந்தித்தல் - இழிவாக பேசுதல்
3. மதி - புத்தி, மனம்
4. நாத்திகம் - கடவுள் இல்லையென கூறுதல்
5. கதி - வீடுபேறு, முக்தி
6. திகைப்பர் - வருந்துவர், பிரமிப்பர்

### பொருள்

தலைவிதியை நினைத்து வருந்துவோர், தம் நண்பரைத் தூற்றுவோர், கோபம் கொண்டு பகைவர்களை இழிந்துரைப்போர், சூழ்ச்சிகள் செய்வோர், சாஸ்திரங்களை நம்புவோர், தமக்கு சாதகமானவற்றை பிரட்டிப் பிரட்டி பேசத்தொடங்குவார்கள் தம் புத்தியில் பொய் கலந்து கடவுளையே இல்லையென்று கூறுவர் இவர்கள் கலக்கமில்லாத நிறைவான விருப்பமே நற்கதியினை தரும் என்பதை உணராது கண் இல்லாதவர் போல திகைப்பர்.

## வினாக்கள்

**1. " நீரெடுத்து வருவதற்கு அவள் மணி**
**நித்திலப் புன்னகை சுடர் வீசிடப் போர்...**

அ. நித்திலம் என்பதன் பொருள் யாது?
முத்து

ஆ. இங்கு வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?
உவமையணி - முத்துப் போன்ற புன்னகை

**2. " போர் எடுத்து வரும் மதன் முன் செல்ல போகும்**
**வேளை அதற்குத் தினம் தோறும்...**

அ. மதன் எனக் கருதப்படுவது யார்?
மன்மதன்

ஆ. மன்மதனுடைய செயல் யாது?
காதல் போர் தொடுத்து முன் செல்லுதல்

**3. " யாத்த தேர் உருளைப்படு மேழைதான் யாண்டு**
**தேர்செலும் ஆங்கு இழுப்புற்று என...**

அ. மேழை என்பதன் பொருள் யாது?
கொம்பில்லாத சிறிய விலங்கு

ஆ. யாத்த தேர் என்பதனை விளக்குக?
உருவாக்கப்பட்ட தேர்

**4. " பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல் புலன்**
**அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்...** **( O/L 2020 01. VIII )**

அ. வதனம் என்பதன் பொருள் யாது? அது எவ்வாறு விபரிக்கப் படுகின்றது.
முகம், பூத்த ஜோதியை வதனத்திற்கு ஒப்பிட்டு கூறினார்

ஆ. கவிஞர் அடைந்த மகிழ்ச்சி எவ்வாறு விபரிக்கப்படுகின்றது?
புலன்கள் அழிந்து புதிய பிறவி எடுப்பதாக கூறப்படுகின்றது

**5. " புலங்களோடு கரணமும் ஆவியும் போந்து**
**நின்ற விருப்புடன் மானிடன்...**

அ. புலங்கள் எனக் கருதப்படுவது?
ஐம்புலன்கள் - சுவை, ஊறு,ஒளி, ஓசை, நாற்றம்

ஆ. இங்கு கரணம் எனக் குறிக்கப்படுபவை?
புத்தி, சித்தம், அகங்காரம்



S.Rajkumar

**6. “ விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்**
**விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே...**

அ. விலங்கு இயற்கை என்பதன் பொருள் யாது?
விலங்கின் குணம்

ஆ. விண்ணுறல் என்பதன் கருத்து யாது?
சொர்க்கத்தை அடைதல்.

**7. “ஆடுபோல் தாவித் தாவி பலபொருள் நாடுவோர்**
**வீழும் ஓர் இடையூற்றினுக்கு அஞ்சுவோர்...**

அ. ஆடு போல் தாவித் தாவி பல பொருள் நாடுவோர் என்பதன் கருத்து.
ஆட்டினை போல அங்கும் இங்கும் பல பொருள் மீது விருப்பம் கொள்ளுதல்.

ஆ. இங்கு வெளிப்படும் அணி யாது?
உவமையணி

**8. ‘‘விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்**
**வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்** **( O/L 2017 01. I )**

அ. இக்கூற்றை கூறியவர் யார்?
பாரதியார்

ஆ. வெகுளி என்பதன் பொருள் யாது?
கோபம்

**9. “ கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார்**
**கண்ணில்லாதவர் போல திகைப்பர் காண்...**

அ. கதி என்பதன் பொருள் யாது?
நன்மை, வீடுபேறு

ஆ. உவமையணினை குறிப்பிடுக?
கண் இல்லாதவர்கள் போல திகைத்தல்

**10. “ மதியினில் புலை நாத்திகம் கூறுவர்**
**மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே...**

அ. மதி என்பதன் கருத்து யாது?
புத்தி . சிந்தை

ஆ. நாத்திகம் என்பதன் விளக்கம் யாது?
கடவுள் இல்லையென்று நம்புவோர், கூறுவோர்

**11. “ தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்**
**தாவித் தாவி பலபொருள் நாடுவோர்** **( O/L 2018 01. X )**

அ. இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
பலபொருட்கள் மீது ஆசைப்படுபவர்களுக்கு

ஆ. முயற்சி அற்றவர்கள் இயல்புகள் இரண்டினை தருக.
தாழ்ந்த உள்ளம், சோர்பு

**12. ஒருவர் தாம் விரும்பியதை அடைவதற்கான வழிமுறைகள் எவையென பாரதியார் கூறுகிறார்?**

ஐம்புலன்களோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உயிரும் ஒன்றுபட்டு விருப்பத்துடன் மனிதன் நலன்களை விரும்புவான் எனில் அவன் விரும்பும் நலன்களை சிறிதளவும் குறைவில்லாமல் அடைவது உறுதியாகும்.

**“ புலன்களோடு கரணமும் ஆவியும் போத்து நின்ற**
**விருப்புடன் மானிடன் நலங்களேது விரும்புவன்**
**அங்கவை நண்ணுறப்பெறல் திண்ணம்...** எனும் பாடலடி விளக்குகின்றது **( O/L 2016 02. I )**

S.Rajkumar

**13. விரும்பியவுடன் விண்ணுலகை அடைய வேண்டும் என்றால் யாது செய்ய வேண்டும் என பாரதியா! கூறுகின்றார்.**

ஒருவர் அங்கும் இங்கும் அலைந்து பலபொருட்கள் மீது ஆசைப்படும் விலங்கின் குணங்களை நீக்கினால் விரும்பியவுடன் விண்ணுலகை அடையலாம்

**" விலங்கியற்கை இல்லையெனில் யாமெலாம்**
**விரும்புமட்டினில் விண்ணுறலாகுமே...** எனும் பாடலடி விளக்குகின்றது

**14.ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்கள் எவை? என பாரதியார் கூறுகின்றார். ( O/L 2019 07. அ )**

பாரதியார் சுயசரிதை எனும் இப்பகுதியில், ஒருவர் தாம் விரும்புவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்களாக பாரதியார் பின்வருவனவற்றை எடுத்து ரைக்கின்றார்

- தாழ்வான உள்ளம்
- சோர்வான மனநிலை,
- ஆடு போல் பல பொருள் நாடுதல்
- வீழுமோர் இடையூற்றினிற்கு அஞ்சுதல்

**" தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்**
**தாவித் தாவி பலபொருள் நாடுவோர் வீழும்**
**ஓர் இடைஃற்றினுக்கு அஞ்சுவோர் விரும்பும்**
**யாவும் பொறார் இவர் தாமன்றே..** எனும் பாடலடி விளக்குகின்றது

**15. பாரதியாரின் காதல் உணர்வு/மாசில்லாத பிள்ளைக் காதல் பற்றி எடுத்துரைக்குக? ( O/L 2017 03. அ)**

- முத்துப் போன்ற புன்னகை பிரகாசிக்க நீரெடுப்பதற்காக செல்லும் அவளைக் கண்டவர் காதல் கொள்ளும் படியாக மன்மதன் அவள் முன் காதல்
- போர் தொடுத்து செல்கின்றான். அதில் தானும் அகப்பட்டதாக பாரதியாரின் காதல் உணர்வு வெளிப்படுகிறது.
- அவள் நீரெடுப்பதற்காக செல்லும் வழியில் அவளின் வருகைக்காக தினமும் காத்திருத்தல்.
- அவள் செல்லும் வழி முழுதும் அவளது பின்னழகை தன் கண்கள் ஆராய்ந்து அதன் வாயிலாக மகிழ்ச்சி கொள்கின்றது எனக் கூறுதல்
- அவளது சிந்தனையில் தன் மனமானது சுழன்று அதன் மூலம் மகிழ்ச்சி அடைந்ததாக பாரதியார் கூறுகிறார்.
- உருவாக்கப்பட்ட உருளுகின்ற தேர்ச் சக்கரத்தில் அகப்பட்ட சிறிய விலங்கு அச் சக்கரத்தோ( சேர்ந்து இழுபட்டுச் செல்வது போல பாரதியார் மனம் இழுபட்டுச் செல்வதாக கூறப்படுகின்றது
- மேலும், அவளது பிரகாசம் பொருந்திய அழகிய முகமானது தன்னை திரும்பி பார்த்தால் த‍ ஐம்புலன்களும் அழிந்து மீண்டும் ஓர் புதுப்பிறவியை அடைவேன் என கூறுகிறார்

இவ்வாறு பாரதியாரின் மாசில்லாத பிள்ளைக்காதல் எடுத்துக்காட்டப்படுவதை காணலாம்.

**16. பாரதியார் சுயசரிதையில் அணி வெளிப்பாடு பற்றி எடுத்துரைக்க.?**

உவமையணியின் வெளிப்பாடு

- ➢ முத்துப் போன்ற புன்னகை கொண்ட பெண்

  **உவமானம்** - முத்து
  **உவமேயம்** - பெண்ணின் புன்னகை
  **பொதுத்தன்மை** – வெண்மையான அழகு

- ➢ தேசபக்தர்களை அழிப்பதற்கு படைவீரர்கள் காத்திருப்பதை அவளின் வருகைக்காக பாரதியார் காத்திருப்பது ஒப்பிடப்பட்டுள்ளது.

  உவமானம் - தேச பக்தர் வருகைக்காக காத்திருக்கும் படைவீரர்
  **உவமேயம்** - அவளின் வருகைக்காக காத்திருந்த பாரதியார்
  **பொதுத்தன்மை** - காத்திருத்தல்
  **உருபு** - போல

- மேழை ஒன்று தேர்ச்சக்கரத்தோடு சேர்ந்து இழுபட்டுச் செல்வதற்கு பாரதியார் மனம் இழுபட்டு செல்வதை ஒப்பிட்டுள்ளார்
  - **உவமானம்** - தேர்ச் சக்கரத்தில் இழுபட்டுச்செல்லும் விலங்கு
  - **உவமேயம்** - அவள் பின்னால் செல்லும் பாரதியாரின் மனம்
  - **பொதுத்தன்மை** - இழுபட்டுச்செல்லல்
  - **உருபு** - என

- அவளுடைய வதனம் பூத்த ஜோதிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது
  - **உவமானம்** - பூத்த ஜோதி
  - **உவமேயம்** - அவளுடைய வதனம்
  - **பொதுத்தன்மை** – பிரகாசிக்கும் அழகு

- ஆடுபோல் அங்கும் இங்கும் தாவிப் பல பொருள் நாடுவோர்
  - **உவமானம்** - ஆடு
  - **உவமேயம்** - பல பொருள் நாடுவோர்
  - **பொதுத்தன்மை** - பல பொருள் மீது ஆசை வைத்தல்
  - **உருபு** - போல்

- கண்ணில்லாதவர் போல பிரமிப்பர்
  - **உவமானம்** - கண் இல்லாதவர்
  - **உவமேயம்** - தாம் விரும்பியவற்றை அடையாதவர்
  - **பொதுத்தன்மை** – தடுமாற்றம்
  - **உருபு** - போல்

- உருவக அணி – சுதந்திரம் நற்பயிராக உருவகிக்கப்பட்டுள்ளது

**17. பாரதியர் காட்டும் சிறுமியின் அழகு வெளிப்பாட்டினை எடுத்துரைக்குக?**

பாரதியார் சுயசரிதையில், தான் கண்ட சிறுமியின் அழகு நலன்களை பாரதியார் அழகுற சித்தரிக்கின்றார். அவற்றை நோக்கும் போது,

- நீர் எடுத்து வருவதற்காக தினந்தோறும் சொல்கின்றவள்.
- முத்துப் போன்ற புன்னகையை வீசுபவள், அது ஒளி விட்டுப் பிரகாசித்தல்
- மன்மதன் அவள் முன்னே போர் தொடுத்துச் செல்லும் அளவிற்கு அழகுடையவள்
- பிரகாசம் பொருந்திய முக வனப்பினைக் கொண்டவள்
- ஆராய்ந்து மகிழ்ச்சி கொள்ளும் படியான பின்னழகினைக் கொண்டவள்.
- புலன்கள் அழித்து மறு பிறவி அடையக் கூடியதான முக அழகு படைத்தவள்

**18. தாம் விரும்பியவற்றை அடையாமல் போனவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும் என பாரதியார் கூறுகின்றார்** **( O/L 2017 03.ஆ)** **( O/L 2019 07. ஆ )**

- தலைவிதியை நினைத்து வருந்துவோர்
- தம் நண்பரைத் தூற்றுவோர்
- கோபம் கொண்டு பகைவர்களை இழிந்துரைப்போர்
- சதிகள்/சூழ்ச்சிகள் செய்வோர்
- தமக்கு சாதகமானவற்றை பிரட்டிப் பிரட்டி பேசத்தொடங்குவார்கள்
- பொய்ச்சாஸ்திரங்களை பேசுவார்கள்
- தம் புத்தியில் பொய் கலந்து கடவுளையே இல்லையென்று கூறுவர்
- இவர்கள் கலக்கமில்லாத நிறைவான விருப்பமே நற்கதியினை தரும் என்பதை உணராது கண் இல்லாதவர் போல வாழ்வர்.

S.Rajkumar

## *கடந்த கால வினாக்கள்*

**11. " தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்**
**தாவித் தாவி பலபொருள் நாடுவோர்** **( O/L 2018 01. X )**

அ. இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
பலபொருட்கள் மீது ஆசைப்படுபவர்களுக்கு

ஆ. முயற்சி அற்றவர்கள் இயல்புகள் இரண்டினை தருக.
தாழ்ந்த உள்ளம், சோர்பு

**08. "விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்**
**வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்** **( O/L 2017 01. I )**

அ. இக்கூற்றை கூறியவர் யார்?
பாரதியார்

ஆ. வெகுளி என்பதன் பொருள் யாது?
கோபம்

**4. " பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல் புலன்**
**அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்...** **( O/L 2020 01. VIII )**

அ. வதனம் என்பதன் பொருள் யாது? அது எவ்வாறு விபரிக்கப் படுகின்றது.
முகம், பூத்த ஜோதியை வதனத்திற்கு ஒப்பிட்டு கூறினார்

ஆ. கவிஞர் அடைந்த மகிழ்ச்சி எவ்வாறு விபரிக்கப்படுகின்றது?
புலன்கள் அழிந்து புதிய பிறவி எடுப்பதாக கூறப்படுகின்றது

**12. ஒருவர் தாம் விரும்பியதை அடைவதற்கான வழிமுறைகள் எவையென பாரதியார் கூறுகிறார்?**
**( O/L 2016 02. I )**

**12.** ஐம்புலன்களோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உயிரும் ஒன்றுபட்டு விருப்பத்துடன் மனிதன் நலன்களை விரும்புவான் எனில் அவன் விரும்பும் நலன்களை சிறிதளவும் குறைவில்லாமல் அடைவது உறுதியாகும்.

**" புலன்களோடு கரணமும் ஆவியும் போத்து நின்ற**
**விருப்புடன் மானிடன் நலங்களேது விரும்புவன்**
**அங்கவை நண்ணுறப்பெறல் திண்ணம்...** எனும் பாடலடி விளக்குகின்றது

**13.** விலங்கியற்கை என்றால் யாது என பாரதியார் கூறுகின்றார்.

ஒருவர் அங்கும் இங்கும் அலைந்து பலபொருட்கள் மீது ஆசைப்படும் தன்மை இந்த குணங்களை நீக்கினால் விரும்பியவுடன் விண்ணுலகை அடையலாம்

**" விலங்கியற்கை இல்லையெனில் யாமெலாம்**
**விரும்புமட்டினில் விண்ணுறலாகுமே...** எனும் பாடலடி விளக்குகின்றது

**15. காதலியை எதிர்பார்த்து அவளுடைய பார்வை கிட்டியதும் ஏற்படும் மகிழ்வு/மாசில்லாத பிள்ளைக் காதல் பற்றி எடுத்துரைக்குக?** **( O/L 2017 03. அ)**

**18. தாம் விரும்பியவற்றை அடையாமல் போனவர்களின் மனநிலை அல்லது தோல்வியை தழுவியவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும் என பாரதியார் கூறுகின்றார்.**
**( O/L 2017 03.ஆ)**

**14.ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்கள் எவை? என பாரதியார் கூறுகின்றார்.** **( O/L 2019 07. அ )**

**18. தாம் விரும்பியவற்றை அடையாமல் போனவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும் என பாரதியார் கூறுகின்றார்** **( O/L 2017 03.ஆ)** **( O/L 2019 07. ஆ )**



S.Rajkumar